# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 33/2018**

**Deposition of Witness for PW8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | போதுமணி | Caste | : | |
| Father/Husband Name | : | பிச்சை | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( A1 present others absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி மாவட்டம் கா.விலக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2017ம் தேதி 17.30 மணிக்கு நான் வாலாந்துார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்த போது குறவகுடி கிராமத்தை சேர்ந்த விக்கிரபாண்டி மனைவி கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 275/2017 பிரிவு 294(b), 324, 506(i)இதச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.,5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே சாட்சிகள் ஜெயராஜ், ஜெயமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் சென்று டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகசர் மற்றும் வரை படம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ7** ஆக குறியீடு

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.03.25 11:01:33 +0530

செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் கவிதா, உக்கிரபாண்டி, மூக்கம்மாள், நல்லகண்ணன், பால்பாண்டி, கரந்தமலை, குருவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் காயம்பட்ட உக்கிரப்பாண்டி, மூக்கம்மாள் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சந்திரன் அவர்களை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து இரண்டு காயச்சான்றுகளை பெற்றேன். எதிரிகள் அனைவரும் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பிணையில் சென்றுள்ளார்கள். இந்த வழக்கின் புலன் விசாரணையை முடித்து 08.12.2017ம் தேதி மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சாட்சி நல்லகண்ணன் உக்கிரப்பாண்டியின் அக்கா கணவர் என்றால் சரிதான். மூக்கம்மாள் உக்கிரப்பாண்டியின் தாயார் என்றால் சரிதான். நல்லகண்ணன் நாகரத்தினம் என்பவர் தோட்டத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. எதிரி செல்வத்துக்கும் நாகரத்தினத்திற்கும் இடப்பிரச்சனை இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. சம்பவத்தில் எதிரிகள் கத்தி பயன்படுத்தி சண்டை போட்டதாக எனது விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கவிதா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் வீட்டின் முன்பு இருந்த சாக்கடை நீரை எடுத்து ஊற்றிக்கொண்டிருந்தார் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் காயம்பட்டவர்கள் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு சென்றதாக உள்ளதா என்றால் உள்ளது. புகார்தாரர் குடும்பத்திற்கும் செல்வத்து

குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக பல வழக்கு உள்ளது என்று இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக எந்தவொரு வழக்கும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி நல்லகண்ணன் வேலை செய்யும் நாகரத்தினம் என்பவருக்கும் 1வது எதிரி செல்வத்திற்கும் காலனி அமைப்பது சம்பந்தமாக இடப்பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அதுபற்றி தெரியாது. நாகரத்தினம் இடத்தில் 1வது எதிரி குடிசை போட சென்ற போது தான் 1வது எதிரி வேறு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நல்லகண்ணன் அவரது மனைவி தூண்டுதலின் பேரில் புகார்தாரர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கம்பால் தாக்கப்பட்டதாக சொன்னதற்கு மேற்படி கம்பு எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளால் புகார்தாரருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து இந்த வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் இந்த வழக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.03.25 11:01:42 +0530